JETIR.ORG ISSN: 2349-5162 | ESTD Year : 2014 | Monthly Issue
JOURNAL OF EMERGING TECHNOLOGIES AND INNOVATIVE RESEARCH (JETIR)
An International Scholarly Open Access, Peer-reviewed, Refereed Journal

# "முற்பகல் செய்யின்" சிறுகதையில் சிறுதெய்வ வழிபாடும் நம்பிக்கையும்

**ம.பரிமளா தேவி**

**பகுதிநேர முனைவர்ப்பட்ட ஆய்வாளர் (தமிழ்)**

**இஸ்லாமியா கல்லூரி**

**வாணியம்பாடி**

**திருப்பத்தூர் மாவட்டம்.**

## முன்னுரை

மனித இன வரலாற்றில் மொழியின் தோற்றம் பற்றி எவ்வாறு அறுயிட்டு கூற முடியாதோ அதுபோல மக்களின் இலக்கியமான நாட்டுப்புற இலக்கியத்தின் தோற்றம் குறித்தும் கூறமுடியாது. மக்களின் வாய்மொழி இலக்கியத்தை நாட்டுப்புறவியல் என்கிறோம். நாட்டுப்புறவியலில் மக்களின் வாழ்வியலோடு தொடர்புடைய விழுமியங்களை அறிகின்றோம். நாட்டுப்புறவியலோடு தொடர்புடைய சிறுதெய்வ வழிபாடு "முற்பகல் செய்யின்" என்னும் சிறுகதையில் எவ்வாறு இடம்பெற்றுள்ளது என்பதை ஆராய்வது ஆய்வுக்கட்டுரையின் நோக்கம் ஆகும்

## நாட்டுப்புறவியல்

நாட்டுப்புறவியலை இரண்டு பெரும் பிரிவுகளாக பிரிகலாம் . நாட்டுப்புற இலக்கியம் என்னும் பகுதியில் நாட்டுப்புறப் பாடல்கள், நாட்டுப்புறக் கதைகள், நாட்டுப்புறக் கதைப்பாடல்கள் , பழமொழிகள், விடுகதைகள் , புராணங்கள் என்றும் நாட்டுப்புறக்கலை,நம்பிக்கைகள் என்னும் பகுதியில் நாட்டுப்புறக் கலைகள் , நாட்டுப்புறக் கைவினைக் பொருட்கள், நாட்டுப்புற நம்பிக்கைகள், நாட்டுப்புற பழக்கவழக்கங்கள், நாட்டுப்புறத் தெய்வங்கள், நாட்டுப்புற விளையாட்டுக்கள், நாட்டுப்புற மருத்துவம் ஆகும். நாட்டுப்புற நம்பிக்கையின் கூறான சிறுதெய்வ வழிபாடு சிறுகதைகளின் வளர்ச்சிக்கு ஆற்றிய பங்கினையும் ஆய்வுக்கட்டுரையில் காண்போம்.

**சிறுதெய்வ வழிபாடு**

நாட்டுப்புறத் தெய்வங்களைத்தான் சிறு தெய்வங்கள் என்கிறோம். குடும்ப தெய்வ வழிபாடும் குல தெய்வ வழிபாடும் ஊர்த்தெய்வ வழிபாடும் சிறுதெய்வ வழிபாட்டில் அடங்கும். வீட்டில் யாரேனும் துன்புற்றாலும் நோய்வாய்ப்பட்டாலும் குடும்ப தெய்வத்திற்குப் பூஜை செய்வர். குடும்ப தெய்வத்தின் பெயரைப் பிள்ளைக்கட்டு வைப்பார்கள். ஒவ்வொரு சாதியினரும் பல குலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு குலத்திற்கும் ஒரு தெய்வம் உண்டு. இன்றும் நாட்டுப்புறங்களில் அந்தந்த குலத்துத் தெய்வத்துணை எனத் திருமண அழைப்பிதழ்களில் அச்சிடுகின்றனர். ஒரே குல தெய்வத்தை வழிபடுபவர்கள் அனைவரும் பங்காளிகளாவர்.இன்றும் குலதெய்வ வழிபாடு தொடர்ந்துகொண்டு தான் இருக்கின்றது.

"குருவை மறந்தாலும் குலதெய்வத்தை மறவேன்

குலதெய்வத்தைக் கும்பிட்டுக் கும்மியடி"

என்பது குல தெய்வ வழிபாட்டின் சிறப்பினைக் கூறுகிறது

**நம்பிக்கைகள்**

நாட்டுப்புறத் தெய்வங்கள் வளமையைக் கொடுப்பதாகவும் ஆறு, குளம் முதலியவற்றைக் காப்பாற்றும் என்றும் கால்நடைகளை நோயிலிருந்து காப்பாற்றும் என்றும் மக்கள் நம்புகின்றனர். நாட்டுப்புறத் தெய்வங்களுக்கு வேண்டுதலை நிறைவேற்றவில்லையென்றால் துன்பத்தை தரும் என்பது மக்களுடைய நம்பிக்கை ஆகும்.

**நாட்டுப்புறத்தெய்வ வகைப்பாடு**

**டாக்டர் சு.சக்திவேல்** அவர்கள் நாட்டுப்புறத் தெய்வங்களை ஐந்தாக வகைப்படுத்துகின்றார்.

1. ஆண் தெய்வங்கள்
2. பெண் தெய்வங்கள்
3. குல தெய்வங்கள்
4. சாதித் தெய்வங்கள்
5. ஊர்த் தெய்வங்கள்

**வழிபாட்டு முறைகள்**

திருநெல்வேலி மாவட்டத்தில் நாட்டுப்புறத் தெய்வங்களுக்குக் கொண்டாடப்படும் விழாவைத் **கொடை** என்றும் மற்ற மாவட்டங்களில் **பொங்கல் வைத்தல்** அல்லது **சாமி கும்பிடுதல்** என்றும் அழைக்கின்றனர்."முற்பகல் செய்யின் " என்னும் சிறுகதையில் வள்ளி எவ்வாறு இசக்கியாக மாற்றப்பட்டிருக்கிறாள் என்பது கதைக்கரு ஆகும். திருநெல்வேலி மாவட்டத்துல சதுர்வேதி மங்கலம் பக்கம் எங்க தாத்தா ஊரு. தாத்தா இந்த வருசம் ஆயினூட்டுக்கு நீ வர வேண்டாம் என்றார்.அப்பாக்க தெவசம் நான் கண்டிப்பா வந்தே தீருவேன்னு பதில் சொன்னேன். நான் சொல்லுகேன் நீ வரக்கூடாது என்று சத்தமாகச்சொல்லி போனைத் துண்டித்துவிட்டார். பன்னெண்டு வருசத்துக்கு முன்னாடி வீட்டுக்கு வந்தப்பதான் என் அப்பா இறந்து போனார். எங்கப் பரம்பரையில நாலு வருசத்துக்கு ஒரு எழவு விழும். இது நாலாவது வருசம். இன்னும் எழவு விழல. அதுக்காகதான் தாத்தா என்னை வரவேண்டாம்னு தடுத்தாரோ என்னவோ?

நான் காரியம் செய்வதற்காக தாத்தா வீட்டுக்கு வந்துட்டேன். அங்க இராத்திரி போன் பேசிட்டே பக்கத்துல இருந்த சுடலைமாடன் பீடம் பக்கமாக வந்துட்டேன். ஏய் யாருய்யா அது, இந்த நேரத்துல? என்று பெண் குரல் கேட்டது. நாதான் ராமசாமி பிள்ள பேரன் என்றேன். டார்ச் அடிச்சிப் பாக்கும்போது வேப்பமரத்தில் சாய்ஞ்சி சிவப்புச் சேலை உடுத்தி பெண் ஒருத்தி காலை நீட்டி உட்கார்ந்திருந்தாள். உங்க தாத்தா நல்லா இருக்காங்களா என்றாள். நீங்க யாருன்னு கேட்டேன். சுடலை மாடன் கோயில்ல பாத்தேன்னு சொல்லு. நானும் தாத்தாவ பார்த்து விசயத்தை சொன்னேன்.

" அவ எழவெடுக்குறவடே.அவ எப்போலாம் தெரியாலோ, அப்போலாம் ஒரு எழவு நம்ம வீட்டுல விழும்"

இது பரம்பரை பரம்பரையா நடந்துட்டு வருது.நீ யார பாத்தியோ அவெ யார் கண்ணுல தெரியாலோ அந்த ஆளு இரண்டு நாளுல செத்துப் போயிரும் என்றார். மன்னர் ஆட்சிக் காலத்துல இந்தெப் பிடாகையில நம்ம குடும்பம்தான் வரி வசூலிச்சிட்டு இருந்திச்சு.அப்போ எந்ந பிரச்சனைன்னாலும் மூத்த பிள்ள சுப்பிரமணியப் பிள்ளைதான் பாத்து விசாரிச்சிட்டு இருந்தாரு. அப்படி ஒரு நா இந்தப் பிடாகையில் ராப்பாடி ஒருத்தன் கொலை பண்ணிட்டதா புகாராகி அவன தூக்கில போட்டாங்க.

ராப்பாடி ஒருத்தன் தினமும் ராத்திரில குறி சொல்லிட்டு போவான். நம்ம வீட்டுக்கு முன்னாடி வந்துபாடும் போது மட்டும் கெட்ட காலம் , சகுனம் சரியில்ல ஒங்க பத்தெல்லாம் அழியப் போவுது. வீட்டுல வரிசையா எழவு விழப்போவுதுன்னு பாடியிருகான். இதையெல்லாம் கேட்டுட்டு இருந்த மூத்த பிள்ள ,திடீரென கதவெத்

தொறந்து ராப்பாடியக் கூப்பிட்டு பரிகாரம் விசாரிச்சிருக்காரு.அப்போ ராப்பாடி “சூலியோட பொணம் இன்னும் மூணு மாசத்துல உங்க பக்கத்துல உழுந்தா சரியாப் போகுன்னு சொல்லியிருக்கான்.

ஆறுமுகத்தோட பொண்டாட்டி வள்ளி சூலியா இருந்துருக்கா. இதெத் தெரிஞ்சிக்கிட்ட மூத்த பிள்ள ,நல்ல சமயம் பாத்துட்டே இருந்துருக்காரு. ரெண்டு நாளுல நல்ல மழெ பெஞ்சிட்டு இருந்துருக்கு .அப்போ ஆறுமுகத்தக் கோட்டாத்துக்குப் போச் சொல்லிட்டு ஒண்ணுமே தெரியாத மாதிரி ஆறுமொகத்துக்குத் தெரியாத மாதிரி ஆறுமொகம் வீட்டுலப் போயி அவன் பொண்டாட்டிக்கிட்ட ஆறுமுகம் இல்லயா ? ன்னு கேட்டுருக்காரு. பத்துக்கு மேல் கொளம் ஒடைஞ்சி பத்து பூரா வெள்ளக்காடாக் கெடக்கு. நீயாது செத்த வாயேன்னு கூப்பிட்டுருக்கார். வள்ளிக்கும் வயக்காட்டு வேல தெரியும்னால அவளும் பத்துக்கு போயிருக்கா. அங்க வள்ளி கொண்ணு சுடலைமாடன் பீடத்துக்கிட்ட தோண்டுன குழியில போட்டு புதைச்சிருக்கார்.

அதற்குப்பிறகு குடும்பத்துல தொடர்ச்சியா நாலு மாசத்துக்கு ஒரு எழவு விழுந்திருக்கு. செத்துப்போன வள்ளி பழிவாங்கிறதா மூத்த பிள்ள நம்பியிருக்காரு. வீட்டுல எழவு உழுறதுக்கு முன்னால நடுவீட்டுல வந்து இருப்பாள். அவெ யாரு கண்ணுக்குத் தெரியாளோ அந்த ஆள் பொணம் அடுத்து விழும். இதுகெல்லாம் காரணம் ராப்பாடியா வந்து குறி சொன்னவன்தான். மூத்தபிள்ள தூக்குல போட்டவனுக்கு மூத்த பிள்ளன்னு பின்னாடிதான் தெரிஞ்சிருக்கு. வயித்துச் சூலிய துடிக்கக் துடிக்கக் கொன்னா அது அமைதியாவா அலையும். இதுக்கு பரிகாரமா வள்ளியப் பொதைச்ச இடத்துல ஒரு கல்லு நாட்டி பூஜை செய்த்து பலி கொடுத்து குளத்தங்கரை இசக்கியா நம்ம குடும்பம் வழிபடத் தொடங்கியது. அவளோட உக்கிரம் தணிஞ்சதும் இனிமே நாலு வருசத்துக்கு ஒரு தடவதான் எழவு எடுப்பேன்னு மூத்த பிள்ள கனவுல வந்து சொல்லியிருக்கா . இப்ப வரைக்கும் எழவு விழல. அவளுக்கு பூசையும் செய்திட்ட வரேன்னு தாத்தா சொன்னார். தாத்தா நேத்து ராத்திரி நடுவீட்டுல ஊஞ்சல்ல ஒரு ஆள் இருக்குற பாத்தேன்னு சொன்னதும் தாத்தா பதறி போனார்.சரி தூங்கு காலையில பாப்போம்ன்னு தூங்கப் போனவர் காலையில் எழவில்லை. உடல் சில்லிட்டு இருந்தது. தாத்தாவின் இறுதிசடங்க முடிச்சிட்டு திரும்பி வரும்போது திரும்பி பார்த்தேன் வேப்பமரத்தில் சாய்ந்தபடி இசக்கி உக்கார்ந்து பார்த்துக்கொண்டிருந்தாள்.

இந்தக்கதையில் வள்ளி நிறைமாத சூலியாக இருப்பாள். தன்னுடைய சுயநலத்துக்காக அவளை மூத்த பிள்ள கொன்றுவிடுவார். தொடர்ந்து அவருடைய வீட்டில் இறப்பு நிகழும். இதெல்லாம் வள்ளியினால் நடப்பதாக நம்பி அவளக்கு வழிபாடு செய்கிறான்.பின்னர் வழிவழியாக குடும்பத்தில் வழிபாடு செய்கிறார்கள். தான் தெரியாமல் செய்த

குற்றத்துக்கு நிறைமாத சூலியான வள்ளியை கொல்லுதல்.அதற்காக தன்னுடைய குடும்பத்தில் ஏற்பட்ட இழப்பு. அதன்பிறகு வள்ளியை இசக்கியாக வழிபடத்தொடங்குதல் மக்களின் நம்பிக்கையைச் சார்ந்தது. கதையின் நீட்சிக்கு சிறுதெய்வ வழிப்பாட்டை இணைத்திருக்கின்றார். நாம் கெட்டது செய்தால் உடனே கெட்டது நடக்கும் என்பது கதை உணர்த்தும் நீதி ஆகும். மக்களின் வழக்காறுகள் மூலம் நல்ல செயல்களை கதைகளின் மூலம் வாசகர்களுக்கு கடத்துவது .

**முடிவுரை**

சிறு தெய்வம் என்பது பிறப்பு இறப்பு உள்ளவை, மனித உணர்வில் தோன்றியவை.சில சக்திகளைக் கொண்டவை,உயிர்பலி உண்டு,நாட்டுப்புறத் தெய்வங்களில் பெரும்பான்மை பெண் தெய்வங்கள், வட்டாரத்திற்கே உரியவை, மக்களால் உண்டாக்கப்பட்டு மக்களால் போற்றப்படுபவை,அசைவ பொருட்கள் படைக்கப்படுகின்றன. தன்னுடைய பயத்தினால் தெய்வமாக்கப்பட்ட சிறுதெய்வம் இசக்கி. அறத்தை உணர்த்தும் நோக்கில் எழுதப்பட்டுள்ளது முற்பகல் செய்யின் சிறுகதை.

**துணைநூல் பட்டியல்**


1. நாட்டுப்புற இயல் ஆய்வு, டாக்டர் **சு.கச்திவேல்**,மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
2. திருக்கார்த்தியல்**, ராம் தங்கம்** , வம்சி பதிப்பகம் ,திருவண்ணாமலை.